திரு. வை. பாலசுந்தரம் : இப்படிக் கொடுக்கப்படுகின்ற கடன் எத்தனை தவணைகளில் திரும்பப் பெறப்படுகின்றது ? அரசின் மூல மாகக் கொடுக்கப்படுகின்ற இந்தக் கடன்கள் வெகுவாகத் திரும்பி வருவதில்லை என்று கூறப்படுவது உண்மையா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதைக் கிட்டத் தட்ட 100 மாதத் தவணைகளில் திருப்பிப் பெற வேண்டுமென்ற முறை இருக்கிறது. இந்தக் கடனைக் கொடுத்து இரண்டு ஆண்டுக் காலம் பொறுத்துத்தான் அந்தக் கடனை வசூலிக்குமாறு உத்தர விடப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கடன் வாங்கியவர்களிடமிருந்து இந்த ஆண்டு வசூலிக்கத் துவங்கி யிருக்கிறார்கள். திருப்பிக் கட்டவில்லை என்ற புகார் இதுவரை இல்லை. இனி வரலாம், வராமலும் இருக்கலாம். பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா : அரிசனங்கள் தொழில் செய்து பொருளாதார முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட திட்டம் இது. இந்தத் திட்டத்தின் கீழ் தொழிலுக்காகக் கொடுக்கக்கூடிய தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அச்சகம் வைக்க ஐயாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள் ; ஐயாயிரம் ரூபாயில் ஒன்றும் வாங்க முடியாது. மருந்து ஷாப் வைக்க, பத்தாயிரம் ரூபாய் கொடுக்கி றார்கள். சைக்கிள் ஷாப் கிராமங்களில் வைக்க 500 ரூபாயும், நகரத்தில் ஆயிரம் ரூபாயும் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகை களையெல்லாம் சற்று உயர்த்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தத் தொகைகள் கிராமத்தில் எந்த அளவுக்கு முதலீடு செய்தால் அந்தத் தொழிலை நடத்த முடியும், பட்டணங்களில் எந்த அளவுக்கு முதலீடு செய் தால் அந்தத் தொழிலை நடத்த முடியும் என்று பார்த்து இருவேறு கூறுகளாகப் பிரித்து தரப்படுகிறது. அந்த வகையில் சைக்கிள் கடை பட்டணத்தில் ஏற்படுத்துவதாக இருந்தால் 1,000 ரூபாய் தரப்படுகிறது. 250 ரூபாய் வீதம் மூன்று சைக்கிள்கள் வாங்கிக் கொண்டு மீதித் தொகைக்கு மற்ற சாமான்களை வாங்கிக் கொள்ள லாம். கிராமங்களில் வைப்பதாக இருந்தால் 500 ரூபாய் கொடுக் கிறோம். அவர்கள் இரண்டு சைக்கிள்கள் வாங்கிக் கொண்டால் போதும். அதை ஹயருக்குக் கொடுத்து அதன் மூலம் சம்பாதிக்க முடியும். லேத் பட்டறைக்கு 10,000 ரூபாய் கொடுக்கிறோம் ;